# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(06.07.2024 முதல் 10.07.2024)

**அறிக்கைஎண்: 28/2024** **தேதி : 05.07.2024**

### கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 38 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது

### கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (06.07.2024 முதல் 10.07.2024).

| கடந்த வார வானிலை (02.07.2024 முதல் 04.07.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (06.07.2024 முதல் 10.07.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 02/07 | நாள்-2 03/07 | நாள்-3 04/07 | தேதி | நாள்-1 06/07 | நாள்-2 07/07 | நாள்-3 08/07 | நாள்-4 09/07 | நாள்-5 10/07 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 2 | 1 | 1 | 1 | 0 |
| 35 | 35 | 38 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 36 | 36 | 37 | 37 |
| 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 26 | 26 | 26 | 26 |
| 6 | 6 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 6 | 7 | 6 |
| 69-57 | 69-43 | 68-49 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-50 | 70-60 | 70-40 | 70-40 | 70-40 |
| 17 | 21 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 26 | 18 | 26 | 26 | 26 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### கரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 06.07.2024 முதல் 907.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 - 37 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 60 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 18 - 26 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | நடவு வயல் | வானிலையை கருத்தில் கொண்டு, குறுவை நெற்பயிரில் முதல் கைக்களையை 20 – 25 நாட்களுக்குள் எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | வளர்ச்சி பருவம் | தற்போது உள்ள தட்பவெப்பநிலையின் காரணமாக பருத்தியில் வளர்ச்சி குன்றி சிவப்பு நிற இலைகள் தோன்றுவதற்க்கு காரணமான மெக்னிசீயம் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இலை வழி தெளிப்பாக 2% மெக்னிசீயம் சல்பேட், 1% யூரியா மற்றும் 0.1% சிங் சல்பேட் தெளிக்க வேண்டும். |
| தென்னை | | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும் |
| கால்நடைகளுக்கு | மாடு | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக கால்நடைகள் மற்றும் கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் வருவதற்க்கு வாய்ப்புள்ளது எனவே கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி போடவும். |

## குறுஞ்செய்தி

தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும்

.

**இயக்குநர்**